**தலைப்பு 193 - தொழில் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இந்த நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கீழே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குவதாக, நிதி நிலைமைக் கூற்றின் முன்னைய வருடத்தின் இறுதி மீதிகள் இந்த வருடத்தில் ஒப்பிடுவதற்காக முன்வைக்கும் போது கடந்த வருடத்தில் காணப்பட்ட மீதிகளுக்கு, தேசிய உற்பத்திறன் செயலகத்தில் ஆண்டினுள் சுவீகரிக்கப்பட்ட மீதிகள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 582,687,237 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றின் பிரகாரம் அது ரூபா 647,939,499 ஆனமையால் ஆரம்ப மீதிகளில் ரூபா 65,252,262 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வேறுபாட்டிற்கான காரணம் கணக்கு பதிவுகளின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இந்த பெறுமதி 2020 ஆம் ஆண்டில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு தேசிய உற்பத்தி திறன் செயலகத்திற்குரியதாக பொது நிர்வாக அமைச்சினால் கையளிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதியாகும். இந்த பெறுமதி கணக்குப் பதிவுகளின் மூலம் வெளிப்படுத்தமுடியாது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கு இணங்க இயலுமான அளவில் சரியானதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) 2021 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்திறன் செயலகத்திற்காக ஆசிய உற்பத்திறன் அமைப்பின் மூலம் நன்கொடைகளாக வழங்கப்பட்டிருந்த USD 20,000 ஆன கணனி உதிரிப்பாகங்கள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக | ஆசிய உற்பத்திறன் அமைப்பின் மூலம் வழங்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 20,000 ஆன உதவித் தொகை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட மூலதனப் பொருட்கள் 2021 நவம்பர் 24 ஆந் திகதியளவில் தேசிய உற்பத்திறன் | வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளும் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 30/94 பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றிலும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | செயலகத்திற்கு கிடைத்துள்ளது. அதற்கமைய மூலதன பதிவேட்டில் அது பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் CIGAS கணக்கு கட்டமைப்பில் அதனை நாளதுவரையாக்கியுள்ளது 2022 ஆம் ஆண்டிலேயே என்பதால் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் அவ்வுருப்படிகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் இதுவரையிலும் CIGAS கணக்கு கட்டமைப்பில் அது நாளதுவரையாக்கப் பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிலையான சொத்துக்களை சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் ACA-6 மாதிரியின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 633,226,812 மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 575,624,796 ஆனமையால் ரூபா 57,602,016 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. எனினும் இதற்கமைய 2021 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்றில் மொத்த சொத்துக்கள் அந்த அளவிலான மிகைக் கணிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் ACA-6 மாதிரியின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதிகளில் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டமைக்கு காரணமாக அமைந்ததாவது நிதிச் செயலாற்றல் கூற்றினை தயாரிக்கும் போது தேசிய உற்பத்திறன் செயகலம் தொழில் அமைச்சு தலைப்பு 193 இன் கீழ் செயற்பட்ட இறுதிக் காலப்பகுதிக்குரியதாக மாத்திரம் அல்லாது அவ் அலுவலகம் பொது நிர்வாக அமைச்சின் தலைப்பு 130 இன் கீழ் செயற்பட்ட முதல் காலப்பகுதிக்குரிய 6000-13-045 மற்றும் 6000-18-033 ஆம் இலக்க வைப்புக் கணக்குகளின் ஊடாக கணக்கு வைக்கப்பட்ட பகுதியில் உள்ளடங்கியிருந்தது. எவ்வாறான போதிலும் மீதிகளை ஏற்றுக்கொண்டு கணக்கு வைக்கும் போது வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் மூலம் | நிலையான சொத்துக்களை சரியாக கணக்கு வைத்து நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக பேண வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய செயற்பட்டுள்ளமையை தெரிவித்துக் கொள்கின்றேன். | |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பரீட்சை மீதிக்கு ஆண்டினுள் திறைசேரியிலிருந்து கிடைத்திருந்த ரூபா 709,243,000 உள்ளடக்கப்பட்டிராததுடன் பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த 249/21 கட்டுநிதிக் கணக்கில் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கிடையே ரூபா 707,153,000 ஆன வேறுபாடொன்றும் நிலவியது. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பரீட்சை மீதிக்கு ஆண்டினுள் திறைசேரியிலிருந்து கிடைத்திருந்த ரூபா 709,243,000 உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன் முதலாவதாக இந்த பரீட்சை மீதியை தயாரித்தமை தொழில் அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு திறைசேரியின் ஊடாக CIGAS மென்பொருள் ஊடாகவே என்பதை விருப்பத்துடன் சுட்டிக் காட்டுகின்றேன்.<br><br>மேலும், திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 709,243,000 ஆன தொகை உள்ளடக்கப்படாது சமப்படுத்தப்பட்ட பரீட்சை மீதியை சமர்ப்பிக்க முடியாது என்பதையும் சுட்டிக் காண்பிக்கின்றேன். அவ்வாறே ரூபா 709,243,000 தொகைக்கும் ரூபா 707,153,000 தொகைக்கும் இடைப்பட்ட வேறுபாடாக ரூபா 2,090,000 ஆன கட்டுநிதி வேறுபாட்டினை தீர்ப்பதற்காக 2022-01-21 ஆந் திகதி மாற்றல் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 செலவின விடயங்களுக்குரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 32,500,000 தொகையான வரவு செலவுத் திட்ட நிதியேற்பாட்டின் 10 செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 24,287,000 ஆன நிதியேற்பாடு அமைச்சரவையின் செயலாளரின் 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அமைச்சரவை பத்திர இலக்கம் 21/1596/304/134 இன் பிரகாரம் மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது. 4 செலவின விடயங்களுக்காக நிதியேற்பாட்டை சாட்டிய பின்னர் எஞ்சிய ரூபா 1,013,000 மற்றும் எஞ்சிய 07 செலவினங்களுக்கான மொத்த நிதியேற்பாடான ரூபா 1,650,000 ஆன கூட்டுத்தொகை ரூபா 2,663,000 தொகையில் 2021 ஆம் ஆண்டினுள் எதுவித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதன் சேமிப்பு 100 சதவீதமாக காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் அவ்வவ்போது ஏற்பட்ட கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக நாட்டினுள் உருவாகியிருந்த நிலைமையின் அடிப்படையில் எதிர்பார்த்தவாறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இயலுமையொன்று இல்லாதிருந்தமையை சுட்டிக் காண்பிக்கின்றேன். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகளை இயலுமான அளவில் நடைமுறைக்குச் சாத்தியமாகவும் துல்லியமான தாகவும் தயாரிக்க வேண்டியமை. |
| (ஆ) | 27 செலவின விடயங்களுக்குரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 104,400,000 ஆன நிதியேற்பாட்டில் ரூபா 45,122,000 மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 32,813,486 தொகை மாத்திரம் | ஏற்றுக் கொள்கின்றேன். இதற்காக 2021 ஆம் ஆண்டு அவ்வவ்போது ஏற்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நாட்டில் ஏற்பட்ட நிலைமைகள் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் மூலதன செலவினங்களின் நிதி செயல்முன்னேற்றத்தை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த செலவின விடயங்களிடையே 16 செலவின விடயங்களுக்கான சேமிப்பின் சதவீதம் 50 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் பரம்பியிருந்தது. | அடைந்து கொள்வதற்கு முன்கூட்டிய திட்டமொன்றினை தயாரிப்பதற்கு முடியாதிருந்த காரணத்தால் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | |
| (இ) | 193-2-05-2001 செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4,000,000 ஆன நிதியேற்பாடு 100 சதவீதம் பயன்படுத்தப்பட்டதாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் இடைத்தடுப்புக்களை பொருத்தும் பணிகளுக்காக கட்டிடத் திணைக்களத்திற்கு இந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2022 யூன் 17 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | கட்டிடங்கள் திணைக்களத்தினால் 2021 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் அதனை தயாரித்து நிறைவு செய்யுமாறு இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிவித்திருந்த போதிலும் 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் அதனை மேற்கொள்வதற்கு தவறியிருந்ததுடன் 2022 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் அதனை நிறைவு செய்து தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் 193-2-5-2103 செலவின விடயத்தின் கீழ் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களை சுவீகரித்தல் மற்றும் 193-2-5-2102 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை சுவீகரித்தலுக்கான மதிப்பீடு 400 சதவீதத்திற்கு அதிக அளவிலான அதிகரிக்கும் வகையில் திருத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களாக உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை மேற்கொள்வதற்கு தற்போதுள்ள கணனிகளின் அளவானது போதாதுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த ஆண்டினை ஆரம்பிப்பதற்கு முன்னர் இனங்காணாத காரணத்தினால் நிதிப் பிரமாணம் 3 இன் பிரகாரம் | சில வருடங்களாக வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிக்கும் போது 193-2-5-0-2102 மற்றும் 193-2-5-0-2103 இன் கீழ் கோரப்பட்ட நிதியேற்பாடுகளை விட குறைவான நிதியேற்பாடு இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் மே மாதம் முதல் அரச நிறுவனங்களில் கணக்கு வைக்கும் நடைமுறைக்காக ITMIS நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் நாட்டில் நிலவும் COVID தொற்றுநோய் நிலைமை காரணமாக Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக மேற்கொள்கின்றமையால் புதிய கணனிகளின் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| செலவின மதிப்பீடுகளை மேற்கொள்ளல் உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. | தேவைப்பாடு அதிகளவில் அதிகரித்துள்ளது. அதனால் அலுவலகத்தில் உள்ள செலவினங்களை முகாமை செய்து நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் நிதியேற்பாட்டினை மாற்றி புதிய கணனிகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 153,730 ஆன பொறுப்புக்கள் திறைசேரி புத்தகங்களில் பதிவு செய்யப்படாமை, 193-1-7-0-2401 செலவின விடயத்தின் கீழ் தனியார் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 308,000 தொகை கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை மற்றும் அந்த செலவின விடயத்தின் கீழ் பதுளை மாவட்டத்தின் அலுவலகத்தினால் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 4,518,165 ஆன தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் திறைசேரியின் குறிப்புக்களை விட நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,056,435 குறித்த பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. | குறித்த நிறுவனத்திற்கு ரூபா 385,000 ஆன பெறுமதி செலுத்த வேண்டிய போதிலும் நிதியேற்பாடு போதியதாக காணப்படாத காரணத்தினால் ரூபா 308,000 ஆன பெறுமதி செலுத்தப்பட்டு ரூபா 77,000 பெறுமதியை செலுத்த எஞ்சியுள்ளது. பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டியது ரூபா 77,000 பெறுமதியான போதிலும் தவறுதலாக ரூபா 385,000 ஆக பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக் கமைய திறைசேரியினதும் நிதிக் கூற்றுக்களினதும் பொறுப்பு அறிக்கைகள் திருத்தப்பட வேண்டியமை. |

## 2.3 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சேவையை கைவிட்டுச் சென்ற 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த முகாமைத்துவ உதவியாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா | முகாமைத்துவ உதவியாளரிடமிருந்து 2011 ஆம் ஆண்டில் இடர்கடனாக ரூபா 138,501 ஆன கடன் தொகை தேசிய காப்புறுதி | தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு நிலுவைக் கடன் மீதியை தாமதமின்றி |

| | | |
|---|---|---|
| 138,501 ஆன தொகை 2022 மே 04 ஆந் திகதி வரையிலும் அறவிட முடியாது காணப்பட்டது. | நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினை பிணையாக வைத்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த இந்தக் கடன் தொகையை தீர்ப்பனவு செய்யாமை தொடர்பில் உத்தியோகத்தருக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை உரிய முறையில் பின்பற்றியுள்ள போதிலும் கடன் மீதியை அறவிடுவற்கு இவ்வாறான நிறுவன நடைமுறையொன்று காரணமாக செயற்பட முடியாதுள்ளது. எவ்வாறான போதிலும் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவத்தின் அடிப்படையில் காப்புறுதி உரித்துறுதியை பிணையாக வைத்து பிணையாக வைத்து பெற்றுக் கொள்ளப்படும் கடன் நடைமுறையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்துவதற்கு எமது அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கடன் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வினவப்பட்டுள்ளது. அதற்கு கிடைக்கும் அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தாங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். | அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2.4 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நன்கொடைகளாக ரூபா 12,757,400 தொகை தேசிய உற்பத்திறன் செயலகத்தில் பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் மிகவும் அவசர நன்கொடையொன்றாக ஆசிய உற்பத்திறன் அமைப்பின் ஊடாக தேசிய உற்பத்திறன் செயலகத்திற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 90,000 ஆன நன்கொடையொன்றினை வழங்குவதற்கு இணங்கியிருந்தது.<br><br>இதற்காக சுகாதார அமைச்சின் கொவிட் தடுப்பு அலகுடன் கருத்துக்களை பெற்று செயற்திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அதற்குரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. | வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளும் போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரமும் அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 30/94 பிரகாரமும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 10,014,543 ஆன இழப்பீட்டுத் தொகை 6000-0-0-17-0-26 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதனுள் உள்ளடங்கியுள்ள நட்டஈடு கிடைக்கப் பெற்று 2 வருட காலத்தை கடந்த பெறுமதி ரூபா 536,326 ஆக காணப்பட்டதுடன் நட்டஈடு வைப்புச் செய்யப்பட்டு 1 முதல் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட பெறுமதி ரூபா 1,371,986 ஆகும். வைப்புச் செய்யப்பட்டு 6 மாதங்களுக்கும் ஒரு வருடத்திற்கும் இடைப்பட்ட பெறுமதி ரூபா 2,971,667 ஆகும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 6000-0-0-17-0-26 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் நிலவிய மீதியில் தற்போது உள்ள மீதி ரூபா 3,173,006.13 ஆகும். | நட்டத்திற்குட்பட்ட தரப்பினருக்கு இழப்பீட்டு பணம் துரிதமாக வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்வேறு காரணங்களால் உரிமையாளர்களுக்கு வழங்கப்படாத இழப்பீட்டுத் தொகையில் ரூபா 2,023,096 இழப்பீட்டு ஆணையாளரின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகள் தொடங்கப்பட்டன. கணக்குகளில் பணம் வைப்பு செய்யப்பட்டு 22 முதல் 48 மாதங்கள் கடந்தும், நீதிமன்ற நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளதால் உரிமையாளர்களுக்கு விடுவிக்க முடியவில்லை. | இழப்பீட்டு ஆணையாளர் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பு செய்யப்பட்டுள்ள கணக்குகள் அனைத்தும் மேல்முறையீட்டு கோப்புகளாக காணப்படுவதுடன், அவற்றின் நீதிமன்ற நடவடிக்கைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்து கணக்குகள் வெளியானதும், அதிக வட்டி வசூலிக்கும் நோக்கில் தேசிய சேமிப்பு வங்கியில் தொழில் இழப்பீடு ஆணையாளர் பெயரில் வைப்பு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**2.5 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் கணக்கு இலக்கம் 010015902566 இற்குரிய 2021 திசெம்பர் 30 மற்றும் 31 ஆந் திகதிகளில் 5 நிறுவனங்களுக்காக வரையப்பட்டிருந்த ரூபா 9,724,913 பெறுமதியான 7 காசேலைகளிடையே 5 உரிய நபர்களுக்கு வழங்குவதற்காக 2022 மே மாதமும் 2 காசோலைகள் 2022 மார்ச் மாதமும் வரையப்பட்டிருந்த காரணத்தினால் இக்காசோலைகளை வரைதல் பணிநிறைவடையாத பணிகளுக்கு நிதியேற்பாட்டினை நிறுத்தி வைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காசோலைகளின் காலத்தை நீடிப்புச் செய்து உரிய தரப்பினர் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியேற்பாட்டினை நிறுத்தி வைக்கும் நோக்கில் காசோலை வரையப்படக் கூடாதெனில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் SC&PMU/Grant/20 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய கடிதத்திலும் நிதிப் பிரமாணம் 610 முதல் 626 வரையிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் | இக்கடிதத்தின் அறிவுரைகளை பின்பற்றாது தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்காது உற்பத்தி திறன் செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது ஆசிய உற்பத்தி திறன் அமைப்பிலிருந்து ரூபா 18,427,300 ஆன வெளிநாட்டு உதவிகள் நேரடியாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவற்றுள் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 12,757,400 மற்றும் 2022 ஆம் ஆண்டின் ரூபா 5,669,900 பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் பயன்படுத்துவதற்கு முன்னர் குறைநிரப்பு மற்றும் வீரமன் நடைமுறை மூலம் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் மிகவும் அவசர நன்கொடையொன்றாக ஆசிய உற்பத்தி திறன் அமைப்பின் ஊடாக தேசிய உற்பத்தி திறன் செயலகத்திற்கு ஐ.அ.டொலர் 90,000 ஆன நன்கொடை வழங்குவதற்கு இணங்கியிருந்தது.<br><br>இதற்காக சுகாதார அமைச்சின் கொவிட் ஒழிப்பு அலகின் கருத்துக்களை பெற்றுக் கொண்டு மிகவும் துரிதமான முறையில் செயற்திட்ட அறிக்கையொன்றை தயாரித்து அதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | வெளிநாட்டு உதவிகள் தொடர்பில் செயற்படும் போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத் தின் சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுரைகளுக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் செயற்பணி

அமைச்சின் முக்கிய பணியாக குறிப்பிடப்பட்டிருந்த தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், பின்தொடர்த்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற பணிகள் மற்றும் ஊழியர் சேம நிதியத்தினை நிர்வகித்தல் போன்ற பணிகளை உரிய முறையில் நிறைவேற்றியிருக்கவில்லை என்பது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஊழியர் சேம நிதியத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாத ரூபா 9,933,449,162 தொகை இலங்கை மத்திய வங்கியின் தொழில் ஆணையாளரின் பங்களிப்புக் கணக்கில் ரூபா 301,779,837 திணைக்களத்தின் ஊழிய சேம நிதியத்தின் வைப்புக் கணக்கிலும் திணைக்களத்தின் உப அலுவலகங்களிலும் வைப்புக் கணக்குகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை, விசேட புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த முறைப்பாடுகளில் 2021 செப்தெம்பர் மாதமளவில் 2015 முதல் 2020 வரையிலுமான ஆண்டுகளுக்குரிய 308 முறைப்பாடுகள் காணப்பட்டமையும் அவற்றுள் 57 சதவீதம் அல்லது 178 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிராமை, 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயழிலந்து காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 5,151 ஆக காணப்பட்டதுடன் அவற்றினை அறவிடுவதற்கு உரிய பெறுமதி ரூபா 3,108,693,249 ஆனமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் தொழில் அமைச்சின் பிரதான பணிகள் நிறைவேறியிருக்கவில்லை. | ‘‘சீ’’ அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளின் அடிப்படையில் இப்பணம் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் தீர்ப்பனவு செய்யும் போது பௌதீக பதிவேடுகள் பாரியளவில் பரிசோதனைக்கு உட்படுத்த நேரிடும். இலங்கை மத்திய வங்கியின் கணனி தரவு கட்டமைப்புடன் ஊழியர் சேமநிதியத்தின் அங்கத்தவர்கள் பற்றிய தகவல்களில் நிலவும் இணக்கமின்மையை தீர்ப்பனவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஒத்துழைப்பு அத்தியவசியமானதாகும். பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்தை விடுவிப்பதிலான செயல் முன்னேற்றமும் அதன் காலப்பகுப்பாய்வும் தொடர்ச்சியாக கண்காணிப்புக்கு உள்ளாக்கப் படுகின்றது. பல்வேறு நடைமுறைகளை தயாரித்து பழைமையான கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தொழில் திணைக்களத்திற்கு வழக்குகள், முறைப்பாடுகள் பாரியளவில் நாளாந்தம் கிடைத்தவாறுள்ள ஒரு நிறுவனமாகும். முறைப்பாடுகளுக்காக தீர்வுகளை வழங்குதல் இடம்பெறுகின்றது. திறந்த பிடியாணை வழங்கியிருந்தமை, பொறுப்புக் கூற வேண்டியவர்களின் | அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணியை நிறைவேற்றுவதற்குரிய பிரதான பணிகள் தொழில் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்ட உருவாக்கங்கள், நடைமுறைப் படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் உரிய முறையில் நிறைவேற்றப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | முகவரிகளை விசாரித்தல் தொடர்பான பணிகள் அலுவலக மட்டத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் ஊடாக செயலிழந்த வழக்குகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1934 இன் 19 ஆம் இலக்க தொழில்இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகங்களின் நோக்காக ‘‘இடருக்கு அல்லது மரணத்துக்கு உள்ளாகும் ஊழியர்களுக்காக தொழில் வழங்குனரிடமிருந்து நட்டஈட்டினை தாமதமின்றி அறவிடுவதன் மூலம் ஊழியர் திருப்தியை ஏற்படுத்துதல்’’ குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சேவையில் ஈடுபட்டுள்ள போது ஏற்படும் உயிராபத்துமிக்க மற்றும் உயிராபத்தற்ற விபத்துக்கள் தொடர்பில் நட்டஈட்டினை அறவிடும் செயன்முறையில் அதிக தாமதம் ஏற்படுகின்றமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. | உயிராபத்துடைய அல்லது உயிராபத்தற்ற விபத்துக்கள் தொடர்பில் தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் கோரிக்கை கிடைத்திருந்த போதிலும் அதற்கான வழக்கு கோவையொன்றை திறப்பதற்கு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் முறையான விண்ணப்பமொன்று மற்றும் மருத்துவ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கமைய விண்ணப்பத்திலும் மருத்துவ அறிக்கையிலும் குறைபாடுகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவற்றை திருத்தும் வரையிலும் ஆரம்ப பணிகளை தொடங்குவதில் தாமதம் ஏற்படக் கூடும்.<br><br>வழக்கு கோவையொன்றை திறந்து தொழில் தருனரிடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட வேண்டும். அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அவ்வறிக்கை சமர்ப்பிப்பதற்கு 30 நாள் கொண்ட காலம் வழங்கப்பட வேண்டும். அக்காலத்தின் பின்னர் அறிக்கை சமர்ப்பிக்காவிடின் அல்லது விபத்தினை மறுத்தால் தொழில்இழப்பீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். | பிரதான பணிகளை நிறைவேற்றும் வகையில் செயற்படுவதற்கும் அப்பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் பின் தொடருவதற்கும் அமைச்சு பொறுப்புடன் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இங்கு விண்ணப்பதாரிகள் ஊனமுற்று காணப்பட்டால் ஒரு தடவையில் அல்லது வருகை தர முடியாது இருப்பின் வழக்கினை தள்ளுபடி செய்யாது அவருக்கு உரிய உரிமையினை நிறைவேற்றும் பொருட்டு பல தடவைகளில் நாட்கள் வழங்கப்படும்.<br><br>தொழில்தருனர் முதலாவது திகதியிலேயே பெரும்பாலும் நீதிமன்றத்திற்கு வருகை தராததுடன் அவர்களை நீதிமன்றத்திற்கு வரவழைப்பதற்கு பதிவுத் தபால், பொலிசின் மூலம், கிராம சேவகரின் மூலம் நொத்தாரிசுகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலமும் தாமதங்கள் ஏற்படலாம். | |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தின் இழப்பீட்டு நீதிமன்றத்திற்காக இடைத்தடுப்புக்களை பொருத்தும் ஒப்பந்தம் அமைச்சின் செலவினத் தலைப்பில் நிகழ்ச்சித் திட்டம் 2 இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தி ரூபா 6,090,000 தொகை 2021 திசெம்பர் 29 ஆந் திகதி கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக எழுத்துமூல உடன்படிக்கையொன்று இல்லாதிருந்ததுடன் 2022 மார்ச் 15 ஆந் திகதியில் உள்ளபடி பணி நிறைவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே 25 ஆந் திகதி | கட்டிடங்கள் திணைக்களத்தினால் 2021 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் அதனை உருவாக்கி நிறைவு செய்வதாக எமக்கு அறிவித்திருந்த போதிலும் 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் அதனை மேற்கொள்ள தவறியிருந்ததுடன் 2022 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் அதனை நிறைவு செய்வதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

வரையிலும் இப்பணி ஆரம்பிக்கப்பட்டிராததுடன் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் அதிக தாமதம் இடம்பெற்றிருந்தது.

## 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டில் இலக்கம் 14 இன் 01 ஆம் அத்தியாயத்தின் 1.5 இன் பிரகாரம் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் காணப்படின் அவற்றின் தகவல்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் கீழுள்ள தேசிய உற்பத்தி திறன் செயலகத்திற்கு ஆசிய உற்பத்தி திறன் சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க டொலர் 90,000 ஆன தொகையில் மஹியங்கனை மருத்துவமனைக்கு தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்கும் செயற்திட்டம் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக 1.3 ஆம் பந்தியின் கீழ் பிரதான பணிகள் மற்றும் நிர்வாக சட்டகம் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் 2022 யூன் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்படும் அறிக்கை மற்றும் அந்த விடயங்களை உள்ளடக்கியுள்ளமை தொடர்பில் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய தகவல்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாறை சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியில் சாரதிகளுக்காக தங்குமிடமொன்று (Driver’s Lodge) நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2021 ஆகஸ்ட் மாதம் ரூபா 5,095,983 பெறுமதிக்கு தனியார் | அம்பாறை சுற்றுலா விடுதியில் அமைந்துள்ள காணியில் சாரதிகளுக்கான தங்குமிட வசதியினை நிர்மாணிக்கும் பணிகளில் 65 சதவீதமான அளவு 2021 திசெம்பர் 31 ஆந் | பணிகளுக்கான முற்பணத்தை செலுத்தும் போது பெறுகைகளுக்கான வழிகாட்டி கோவைகளின் பிரகாரமும் |

| | | |
|---|---|---|
| நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய முற்பணத்தின் பெறுமதி 20% வேண்டிய போதிலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறும் வகையில் 2021 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 1,149,855 தொகையும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 3,617,753 தொகையுமாக (நிறுத்தி வைக்கப்பட்ட பணம்) கழிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தத்தின் மொத்த பெறுமதிக்கு முற்பணமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2022 சனவரி மாதம் நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட இந்த ஒப்பந்தம் 2022 மே 25 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திகதி வரையில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2022 சனவரி மாதமளவில் முழுமையாக நிர்மாணங்கள் நிறைவு செய்வதற்கு ஒப்பந்தக்காரர் இணங்கியிருந்தார். எனினும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கான காலம் 2022 ஆம் ஆண்டில் மே மாதம் வரையிலும் நீடிப்புச் செய்வதாக ஒப்பந்தக்காரர் கோரியிருந்ததுடன் அமைச்சின் மூலம் நீடிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய குறித்த ஒப்பந்தக்காரரினால் 2022 மே 31 ஆந் திகதியளவில் அம்பாறை சுற்றுலா விடுதியில் இந்த நிர்மாணங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு எமது அமைச்சிற்கு பொறுப்பேற்குமாறு வாய்மொழி மூலம் கோரியிருந்ததுடன் தொழில் திணைக்களத்தின் சிவில் பொறியியலாளரினால் நிர்மாணங்களின் தரம் தொடர்பிலான களப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக காணப்பட்டது. | உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரமும் செயற்பட வேண்டும். |

## 3.5 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இழப்பு ஏற்பட்டு 6 முதல் 8 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் 2013-2015 காலப்பகுதியினுள் 5 | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வாகன விபத்து இடம்பெற்று பல வருட காலம் | நிதிப் பிரமாணத்திற் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களுக்கு ஏற்பட்ட ரூபா 403,939 ஆன இழப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிட்டவாறு காணப்பட்டது. | கடந்திருந்தது. அக்காலப்பகுதியில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டுள்ள போதிலும் கோவைகளில் உரிய பதிவுகள் வைக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அதனால் அக்கோவைகளை மீள பரிசோதனைக்கு உட்படுத்தி அக்கோவைகளுக்குரிய குறைபாடுகளை அல்லது முழுமையாக பூர்த்தி செய்யப்படாத கோவைகளை துரிதமாக திருத்தி உரிய பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் பதவியணி சம்பளத்தை தயாரிக்கும் போது சம்பளப் பிரிவின் முகாமைத்துவ உதவியாளரினால் சம்பள மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அது தொடர்பில் 2022 சனவரி 11 ஆந் திகதி வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த சம்பள மோசடி 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2020 திசெம்பர் மாதம் வரை இடம்பெற்றிருந்ததுடன் அண்ணளவான அதன் பெறுமதி ரூபா 5,331,520 ஆகும். அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் இடம்பெற்றிராததுடன் 5 ½ மாதங்கள் கடந்திருந்த போதிலும் ஆரம்ப விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் பதவியணியக்காக சம்பளத்தை செலுத்தும் போது பண மோசடிகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டது 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திலேயே என்பதால் 2021 ஆம் ஆண்டில் நட்டங்கள் மற்றும் இழப்புக்களின் கீழ் கணக்கு வைக்கப்படவில்லை.<br><br>தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் ஒட்டுமொத்த நடைமுறையையும் விசாரணைக்கு உட்படுத்தி குழுவொன்றின் மூலம் மொத்த நட்டம் ரூபா 5,133,520 இற்கு அண்மைய தொகை இனங்காணப்பட்டுள்ளதுடன் அறிக்கை தயாரிக்கப்பட்டவாறு காணப்படுகின்றது.<br><br>எவ்வாறான போதிலும் இது தொடர்பில் குறித்த உத்தியோகத்தர் பணி | தாபன விதிக் கோவையின் விடயம் II பகுதிக்கமைய செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நீக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டு வெளிநாட்டு பயணங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளதுடன் மோசடி செய்யப்பட்டுள்ள தொகையில் ஒரு தொகை அறவிடப்பட்டுள்ளது. | |

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் பதவியணிக்கு உணவு உட்கொள்வதற்காக மெஹிவர பியச கட்டிடத்தின் 6 ஆம் தளத்தில் இடமொன்றினை அமைப்பதற்காக அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,159,662 தொகை 2021 திசெம்பர் 06 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. மெஹிவர பியச கட்டிடத்தின் 4 ஆம் தளத்தில் சுமார் 11,286 சதுரஅடி பரப்புடைய சிற்றுண்டிச்சாலையொன்று உருவாக்கப்பட்டள்ள போது அமைச்சின் உத்தியோகத்தர் களுக்காக மாத்திரம் உணவு உட்கொள்வதற்கான இடமொன்றுக்காக ரூபா 1,159,662 செலவிடப்பட்டிருந்தது. | மெஹிவர பியச கட்டிடத்தின் 06 மற்றும் 07 ஆம் தளங்களில் நடாத்திச் செல்லப்படும் தொழில் அமைச்சின் மூலம் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கி அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள் பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குதல் மற்றும் அவசியமான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் போன்ற ஏனைய அரச பிரிவுகளின் மற்றும் தனியார் பிரிவு நிறுவனங்களை இணைத்து பாரிய செயற்பொறுப்பொன்று நிறைவேற்றப்படுகின்றது.<br><br>இவ்வாறு மேற்படி கடமைகளை நிறைவேற்றுவதற்காக நாளாந்தம் அமைச்சின் வளாகத்தினுள் பல்வேறு கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை போன்றே பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சிற்கு வருகை தரும் உத்தியோகத்தர் | அரச செலவினங்களை மட்டுப்படுத்து வதற்காக அறிவுரை வழங்கப்பட்டுள்ள போது மூலதன செலவிடல்கள், சிக்கனத்தன்மை தொடர்பில் கருத்தில் கொண்டு ஆக்கபூர்வமான பணிகளுக்கு பணத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | களுக்கும் பிரமுகர்களுக்கும் எமது நாட்டின் கௌரவம் பாதுகாக்கப்படும் வகையில் உபசாரம் செய்தல் அத்தியவசியமான பணியாகும். குறித்த உபசரணை வசதிகளை மேற்கொள்வதற்கு தேநீர் ஒழுங்குபடுத்துவதற்கு மற்றும் ஏனைய பணிகளை ஒழுங்குபடுத்துவதற்கு அமைச்சிடம் திட்டவட்டமான இடமொன்று காணப்படாமையால் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ள காரணத்தினால் விருந்தினர்களுக்கு உபசரணை செய்தல் மற்றும் ஏனைய பணிகளுக்காக அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய இடமொன்றை ஒழுங்கமைக்க உத்தேசிக்கப்பட்டது. அதற்கமைய குறித்த உத்தேச பிரிவில் அந்த இடத்தை உரிய முறையில் ஒழுங்கமைப்பதற்கு தொழில் ஆணையாளர் நாயகத்தின் இணக்கப்பாடும் பெற்றுக் கொண்ட பின்னர் இந்த இடம் உருவாக்கப்பட்டது. | |

## 3.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குத்தகை தவணைகளை செலுத்தி நிறைவு செய்யப்பட்டிருந்த தேசிய உற்பத்தி திறன் செயலகத்தினால் பயன்படுத்தப்படும் 5 வாகனங்களின் உரித்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காத | இது தொடர்பில் இலங்கை வங்கியில் கோரியிருந்ததுடன் அதன் குத்தகை தவணைகளை செலுத்தி நிறைவடைந்துள்ளதாக குறித்த வாகனங்களை சுவீகரிக்க முடியும் எனவும் அறிவித்திருந்தது. தேசிய | வாகனங்களை நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணத்தினால் அவ்வாகனங்களின் உரித்து இலங்கை வங்கிக்கு சொந்தமாக காணப்பட்டதுடன் மேலும் 4 வாகனங்களின் தற்போதைய உரித்து தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் பெயரில் காணப்படவில்லை. | உற்பத்தி திறன் செயலகம் பயன்படுத்தும் வாகனங்கள் இவ் அலுவலகத்தின் பெயரில் சுவீகரிப்பதற்காக இதற்கு முன்னர் இந்த அலுவலகங்களுக்கு உரியதாக காணப்பட்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து கோரிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த அமைச்சின் மூலம் எமக்கு அறிவிக்கப்பட்டதாவது தேசிய உற்பத்தி திறன் செயலகம் பொர் நிர்வாக மற்றும் நிர்வாக அமைச்சின் கீழ் உள்ள நிறுவனம் ஒன்று என்பதால் சுவீகரிப்பதற்கு இயலுமை என்பதே ஆகும். அதனால் இவ் அலுவலகத்தின் பெயரில் அந்த வாகனத்தை சுவீகரிக்க முடியாதுள்ளது. | |
| (ஆ) | 1934 இன் 19 ஆம் இலக்க தொழில் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் XII பிரிவில் 57(1) பிரிவிற்கமைய ஊழியர் ஒருவருக்கு சேவையில் ஈடுபட்டுள்ள போது விபத்தொன்று ஏற்பட்டு 14 நாட்களுக்கு தொழில்தருனரால் தொழில் ஆணையாளருக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதுதொடர்பாக எதுவித நடவடிக்கையும் தயாரிக்கப்படாமையால் தொழில்நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த விபத்துக்கள் 5 மாதங்கள் முதல் 12 வருடங்கள் வரை தாமதடைந்து கிடைத்திருந்தமை பதிவேடுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. | விபத்து ஏற்பட்டு 14 நாட்களினுள் தொழில் தருனரால் தொழில் இழப்பீட்டு ஆணையாளருக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் அதற்கான நடவடிக்கை எடுப்பதெனில் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடர வேண்டியதுடன் அது நடைமுறையில் சிரமமான செயற்பாடொன்றாகும். அந்நடைமுறையை மேற்கொள்வதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றும் நிறுவனத்தில் இதுவரையிலும் காணப்படவில்லை. | குறித்த அதிகாரச் சட்டத்தை திருத்தியமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு முறையான நடைமுறை யொன்றினை தயாரிப்பதற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொழில் அமைச்சில் பௌதீக ரீதியாக காணப்படாத போதிலும் தொழில் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 8 வாகனங்களில் ஒரு வாகனம் அவசர விபத்தொன்றின் பிரகாரம் அகற்றப்பட வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டில் காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாகனத்திற்காக 2021 ஆம் ஆண்டிடின் போது புதிய வருமான அனுமதிப் பத்திரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படுவதாகவும் ஏனைய 7 வாகனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொண்டு குறித்த நிறுவனத்திற்கு சுவீகரித்தல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. | இதுவரையிலும் இந்த அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இந்த 08 வாகனங்கள் தொடர்பில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. அத்தகவல்களுக்கமைய ஒரு வாகனம் செயலாளர், தொழில் மற்றும் தொழில்சார் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>எஞ்சிய 07 வாகனங்கள் தொடர்பில் மேலதிக தகவல்களை கோரி இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபை, திறன்கள் அபிவிருத்தி, தொழில்சார் கற்கைகள், ஆராய்ச்சி புத்தாக்க இராஜாங்க அமைச்சில் அல்லது ஏனைய இணைந்த நிறுவனமொன்றிடம் காணப்படின் அத்தகவல்களை இந்த அமைச்சிற்கு அறிவிக்குமாறு கடிதத்தின் மூலம் கோரப்பட்டுள்ளது. அதற்கமைய திறன்கள் அபிவிருத்தி, தொழில்சார் கற்கைகள், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றான மூன்றாம் நிலை மற்றும் தொலைக்கல்வி ஆணைக்குழுவிற்கு சொந்தமாக ஒரு வாகனம் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாகனத்தை உரிய முறையில் சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் இடம்பெற்றவாறு உள்ளன. ஏனைய 06 வாகனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் வாகனங்கள் காணப்படும் இடங்களை | இவ்வாகனங்கள் தொடர்பில் துரிதமாக தகவல்களை பெற்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இனங்கண்டு உரிய நிறுவங்களுக்கு சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஈ) | சிறந்த தொழில் சூழலொன்றுக்காக தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தல் (சுனிசி மெஹவர) வருடாந்த மதிப்பீட்டின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 45,000,000 ஆன நிதியேற்பாட்டினை பயன்படுத்தி ஏனைய 03 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 11,856,138 தொகையில் 2021 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாத பணிகளுக்காக ரூபா 3,028,506 எனுமாறு ரூபா 14,884,644 செலவிடப்பட்டிருந்தது. | சுனிசி மெஹிவர நிகழ்ச்சித் திட்டத்தின் முழுமையான, ஆக்கபூர்வமான மற்றும் நல்ல வேலைவாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சுனிசி வேலைவாய்ப்பு மற்றும் மேம்படுத்தல் மற்றும் தேசிய உற்பத்தி திறன், வேலைத்தளத்தின் உரித்து, சமூக பாதுகாப்பு, சமூக ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக தொழில்அமைச்சிற்கு இணைந்த நிறுவனங்களுக்கும் பொருத்தமான சூழலொன்று நிலவுவது அத்தியாவசியமானதாகும். அதனால் தொழில் அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்காக சிறந்த வேலைவாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு பொருத்தமான சூழலொன்றை உருவாக்குவதற்காக இந்நிதியேற்பாடு பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. | சுனிசி மெஹிவர நிதியேற்பாடு அந்த நோக்கத்தை நிறைவேற்று வதற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | உற்பத்தி திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 138 பேர் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் 75 எண்ணிக்கையானவை 2020 ஆம் ஆண்டில் உற்பத்தி திறன் விருது போட்டிக்கு முன்வந்திருக்கவில்லை. | தேசிய உற்பத்தி திறன் விருது போட்டி 2020 ஆம் ஆண்டிற்குரியதாக விண்ணப்பம் கோரல் நாடு முழுவதும் உரிய நியமங்களை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாகாண ரீதியில் மற்றும் மாவட்ட ரீதியில், பாடசாலைகள், பிரிவெனாக்கள், அரச | உற்பத்தி திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலகங்களில் உற்பத்தி திறன் எண்ணக்கருவை உரிய முறையில் நடைமுறைப்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவனங்கள் மற்றும் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களை உள்ளடக்கும் வகையில் நடாத்தப்பட்டது. தேசிய உற்பத்தி திறன் செயலகம், மாவட்ட செயலகங்களில் அமைந்துள்ள உற்பத்தி திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஊடாக அனைத்து பிரதேச செயலகங்களிலும் உற்பத்தி திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த செயலமர்வு நடாத்தப்படும் திகதிகள் மற்றும் நிறுவனம் ஈடுபட வேண்டிய நேரங்கள் பணிப்பாளரினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. அவ்வாறே எமது உத்தியோகபூர்வ வலைத்தளத்திலும் இதுதொடர்பில் மும்மொழிகளிலும் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்தும் பல்வேறு அறிவு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்ட போதிலும் கொவிட் தொற்றுநோய் பரவியமையின் காரணமாக விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் குறைந்த மட்டத்தில் நிலவியது. | வேண்டியமை. |
| (ஊ) | 1980 யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோருக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்காக தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் விண்ணப்பங்களை பரிந்துரை செய்யும் போது தொழில் அமைச்சினால் ஒரே நலனாளிகளின் இரு விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 1,000,000 ஆன தொகை கூடுதலாக செலுத்த நேர்ந்திருந்ததுடன் கடந்த கணக்காய்வு அறிக்கையில் இது தொடர்பில் சுட்டிக் | 2022 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவுகளுக்காக பரிந்துரை செய்யப்பட்ட மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பங்களின் தகவல்களை தரவுக் கட்டமைப்பில் நாளதுவரையாக்கல் தவறவிடப்பட்டுள்ளது. அத்தகவல்கள் அனைத்தும் உரிய தரவுக் கட்டமைப்பில் உள்ளடக்குவதற்கு உரிய பணிகள் இடம்பெறுகின்றன.<br><br>மேலும் யூலை வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டோர்களுக்கு | 2022 ஆம் ஆண்டிற்கு முன்னர் செலுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம் தரவுக் கட்டமைப்பு நாளதுரையாக்கப் படாமையின் அடிப்படையில் இரட்டைக் கொடுப்பனவுகள் இடம்பெறும் அபாயம் உள்ளமையால் அத்தரவுகளை தரவுக் கட்டமைப்பில் உள்ளடக்க நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் உரிய தரவுக் கட்டமைப்பு திருத்தப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் பிரகாரம் தரவுக் கட்டமைப்பு நாளதுவரையாக்கப்பட்ட போதிலும் 2022 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட நலனாளிகள் தொடர்பில் வரவு செலவுத் திட்ட திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின் பிரகாரம் தரவுக் கட்டமைப்பு நாளதுவரையாக்கப் படாமையின் அடிப்படையில் அந்நபர்களுக்கு மீண்டும் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்படும் அபாயம் நிலவியது.<br><br>பதவி நிலை உத்தியோகத்தர்களினால் விண்ணப்பத்தின் சரியான தன்மை தொடர்பில் பரீட்சிக்கப்பட்ட போதிலும் தரவுக் கட்டமைப்பு நாளதுவரையாக்கல் தொடர்பில் கண்காணிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. | நலன்களை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் விசாரணை பட்டியலின் பிரகாரம் பரீட்சிக்கப்படுவதுடன் தரவுக் கட்டமைப்பு, விண்ணப்பம் ஆகியவற்றுக்கிடையோன தகவல்கள் சரியானதா என்பது உதவி செயலாளர் (நிறுவன) ஊடாக தனிப்பட்ட ரீதியில் பரீட்சிக்கப்படுகின்றது. எவ்வாறான போதிலும் அவ்வாறு பரீட்சிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பிரதி எடுக்கப்படாததுடன் அந்த குறைபாட்டினை இனங்காணுதல் தொடர்பில் கணக்காய்விற்கு எமது பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறோம். அதற்கமைய குறிப்பு புத்தகத்தில் அந்த சிறு குறைபாடும் இல்லாத வகையில் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | எடுத்தல் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப் பட வேண்டியமை. |
| (எ) | அம்பாறை சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி 2022 மே மாதம் வரையிலும் தொழில் அமைச்சிற்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை | இது தொடர்பில் தொடர்ச்சியாக வளப் பாதுகாப்பு அமைச்சிற்கும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வளப் பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) இனால் இந்த காணியின் ஒரு பகுதி அம்பாறையில் பாதுகாக்கப்பட்ட இடத்திலிருந்து அகற்றுவதற்குரிய பணிகள் இடம்பெற்றவாறு உள்ளதாகவும் அந்த செயன்முறையில் | நிறுவனத்திற்கு உரித்தற்ற காணிகளில் நிர்மாணங்களை மேற்கொள்ளக் கூடாததுடன் சுற்றுலா விடுதி நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ள மையால் காணியை சுவீகரித்தல் துரிதப்படுத்தப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | இறுதியில் இந்தக் காணியின் ஒரு பகுதி தொழில் அமைச்சிற்கு சாட்ட முடியும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. | |

**4. நல்லாளுகை**

**4.1 மக்களுக்கான சேவையை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 30 ஆந் திகதியளவில் தொழில் நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த விபத்துக்களிடையே உயிராபத்துள்ள 140 விபத்துக்கள் மற்றும் உயிராபத்தற்ற 424 விபத்துக்களுக்காக நட்டஈட்டினை அறவிடும் நடைமுறை நிறைவு செய்யப்பட்டிராததுடன் விபத்து அறிக்கையிடப்பட்டு 5 வருடங்களை கடந்த உயிராபத்துமிக்க 14 விபத்துக்கள் மற்றும் உயிராபத்தற்ற 29 விபத்துக்களும் இதனுள் உள்ளடங்கியிருந்தது. | உயிராபத்துடைய அல்லது உயிராபத்தற்ற விபத்துக்கள் தொழில் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு கோரிக்கை கிடைக்கும் போது அதற்காக வழக்கு கோவையொன்று திறத்தல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் முறையான விண்ணப்பம் மற்றும் மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அதற்கமைய விண்ணப்பத்தின் மற்றும் மருத்துவ அறிக்கையில் குறைபாடுகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் வரையிலும் ஆரம்ப நடவடிக்கைகளை தொடர்ங்குவதில் தாமதம் ஏற்படக் கூடும்.<br><br>சரியான விண்ணப்பம் மற்றும் மருத்துவ அறிக்கை கிடைத்த பின்னர் வழக்கு கோவை திறக்கப்பட்டு தொழில் வழங்குனரிடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட வேண்டும். அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 30 நாட்கள் வரையான காலம் வழங்கப்பட வேண்டும். அக்காலத்தின் பின்னர் | இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு குறித்த பணத்தை துரிதமாக நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

அறிக்கையை சமர்ப்பிக்காவிடின் அல்லது விபத்தினை மறுப்பாரெனின் தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்படும்.

தொழில் இழப்பீட்டு நீதிமன்றம், நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு மூலம் நியமிக்கப்படும் மாவட்ட மற்றும் நீதவான அதிகாரங்களையுடைய மேலதிக நீதவான் ஒருவரின் கீழ் நடைமுறைப்படுத்தப் படுவதுடன் நீதிமன்ற நடவடிக்கைகள் சிவில் வழக்கு நிறைவேற்றுக் கோவை, குற்றவியல் வழக்கு நிறைவேற்றுக் கோவை மற்றும் சாட்சிகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மாவட்ட நீதிமன்றத்தில் நடைமுறைக்கமைய செயற்படுத்தப்பட வேண்டும். அந்த நீதிமன்ற நடைமுறைகளில் இரு தரப்பினரின் சாட்சிகளுக்கு மேலதிகமாக மருத்துவரின் அவசர பரிசோதகர்கள், மாவட்ட கைத்தொழிற்சாலை பரீட்சிப்பு பொறியியலாளர், பொலிஸ் உத்தியோகத்தரின் சான்றோரை சாட்சிகளுக்காக வரவழைப்பதற்கு நேர்வதுடன் அவ் உத்தியோகத்தர்கள் உரிய தினத்தில் வருகை தராத காரணத்தினால் தற்போது 02 வருட காலமாக காணப்படும் சுகாதார சட்டத்திட்டங்களின் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எடுக்கப்படும் காலம் தொடர்பில் திட்டவட்டமான காலத்தை நிர்ணயிக்க இயலுமையொன்று காணப்படவில்லை. இங்கு விண்ணப்பதாரர்கள்

| | | | |
|---|---|---|---|
| | | ஊனமுற்றிருக்கின்ற மையால் ஒரு தடவையில் வருகை தர முடியாத காரனத்தால் வழக்கு இரத்துச் செய்யப்படாததுடன் அவருக்குரிய நியாயத்தினை நிறைவேற்றும் நோக்கில் பல தடவைகள் அவருக்கு வழங்கப்படும். | |
| | | தொழில்தருனர் முதலாவது திகதியிலேயே பெரும்பாலும் நீதிமன்றத்திற்கு வருகை தராததுடன் அவர்களை நீதிமன்றத்திற்கு வரவழைப்பதற்கு பதிவுத் தபால், பொலிசின் மூலம் கிராம சேவகரின் மூலம் நொத்தாரிசுகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் ஊடாக தாமதங்கள் இடம்பெறலாம். | |
| | | பொதுவான நிலைமைகளில் தொழில் தருனர் குறித்த விபத்து அவர்களின் களத்தில் இடம்பெறவில்லையென தெரிவிப்பதற்கு தொடர்ச்சியாக முன் வருகின்றனர். அவர்களின் பொதுவான கருத்தாவது ஒரு ஊழியருக்கு இழப்பீடு வழங்குவதற்கு நேர்ந்தால் ஏனைய ஊழியர்களுக்கும் இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதே ஆகும். | |
| (ஆ) | தொழில் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரின் 2021 மார்ச் 22 ஆந் திகதி அறிக்கையின் பிரகாரம் தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 5 வருடங்களை கடந்த 10 கோவைகளை பரீட்சித்த போது 03 முதல் 09 | இதன் கீழ் குறிப்பிடப்பட்டள்ள அனைத்து வழக்கு கோவைகளும் தொழில் இழப்பீட்டு நீதிமன்றங்களில் தற்போது விசாரணையில் உள்ள வழக்குகளாகும். இந்த நீதிமன்றங்களில் மாவட்ட நீதிமன்றத்தில் தன்மையிலான வழக்குகள் விசாரிக்கப்படுவதுடன் | இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு உரிய பணத்தை துரிதமாக நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்கள் வரையான காலம் முழுவதும் 13 முதல் 52 தடவைகள் வழக்குகளின் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் 2021 சனவரி வரையிலும் தீர்ப்பொன்று கிடைத்திராதமை அவதானிக்கப்பட்டது.<br><br>அதற்கமைய இழப்பீட்டு விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து இழப்பீட்டினை பெற்றுக் கொள்ள அதிக காலம் கடப்பதனால் கிடைக்கும் இழப்பீட்டுத் தொகையில் பெற்றுக் கொள்ளக் கூடிய நலனும் அவர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியாமையால் இழப்பீட்டினை வழங்கும் நடைமுறையில் அதிக தாமதம் ஏற்படுவதற்கு உரிய காரணங்களை ஆராய்ந்து அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்குத் தொடுப்பவர் மற்றும் எதிராளி ஆகிய தரப்பினரிடமிருந்து சாட்சிகளை விசாரித்தல், அவர்களின் சாட்சிதாரர்களின் சாட்சிகளை விசாரித்தல், விசேட உத்தியோகத்தர்களின் சாட்சிகளை விசாரித்தல், குறுக்கு விசாரணை, மீண்டும் வினா எழுப்புதல் போன்ற நீதிமன்ற நடைமுறைகள் குறித்த தரப்பினரால் பின்பற்ற வேண்டியதுடன் இரு தரப்பினருக்கும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கமைய வழக்கொன்றுக்காக எடுக்கப்படும் காலத்தை திட்டவட்டமாக தெரிவிப்பதற்கு இயலுமையொன்று காணப்படவில்லை. அவ்வாறே சரியான நீதிமன்ற நடவடிக்கைகளின் பிரகாரம் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளாமையால் தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்தில் தீர்ப்பினை உச்ச நீதிமன்றத்தில் திருத்தியமைப்பதற்கும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. | வேண்டியமை. |
| (இ) | தொழில் இழப்பீடு நீதிமன்றத்தில் தீர்ப்புகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்ட 13 கோவைகளுக்குரிய தொழில்தருனர்களால் இழப்பீட்டு அலுவலகத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 4,947,535 தொகைக்காக சேமிப்புக்கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 3,729,505 ஆன சேமிப்பு வைப்புக் கணக்குகள் 10 ஆரம்பிக்கப்பட்டு 1 முதல் 4 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடநதிருந்தது. | மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கு கோவைகள் தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் கட்டளையை வழங்கும் வரையில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது. | இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு பணத்தை துரிதமாக நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தொழிலில் ஈடுபட்டுள்ள போது ஏற்படும் உயிராபத்து மிக்க விபத்துக்கள் காரணமாக மரணமடையும் ஊழியர்களின் சிறுவயதுடைய குழந்தைகளுக்கு உரித்தான இழப்பீட்டு பணம் அவர்களின் வயது பூர்த்தியடையும் வரையிலும் தேசிய சேமிப்பு வங்கியில் இழப்பீட்டு ஆணையாளர் பெயரில் உள்ள நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டு குறித்த வயதை அடைந்த பின்னர் அவர்களுக்கு விடுவிக்க்பபட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் காணப்பட்ட அவ்வாறு வயதினை பூர்த்தியடைந்த விடுவிக்கப்படாத நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 6,100,788 ஆகும். | 2022 யூன் 08 ஆந் திகதி அளவிலும் நிலவிய மீதி ரூபா 1,075,000 ஆகும். | இழப்பீட்டு பணத்தை துரிதமாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (உ) | இழப்பீட்டிற்கு உள்ளான தரப்பினருக்கு உரித்துடையதாக இழப்பீட்டு நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட வேண்டிய வழக்கு கட்டளைகளின் பிரகாரம் தொழில் தருனர் இழப்பீட்டு தொகையை செலுத்தாத காரணத்தினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 46 வழக்குகளின் பிடியாணைகளாக காணப்பட்டதுடன் அவற்றிலிருந்து உரித்தாக வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூபா 13,419,197 ஆகும். இவற்றிற்கிடையே பிடியாணை வெளியிடப்பட்டு 10 வருடங்களை விஞ்சிய 10 வழக்குகளுக்குரிய ரூபா 1,873,352 தொகையும் 5-10 வருடங்களுக்கு இடைப்பட்ட 21 வழக்குகளுக்குரிய ரூபா 6,917,546 தொகை மற்றும் 1-4 வருடங்களுக்கு இடைப்பட்ட 15 வழக்குகளுக்குரிய ரூபா 4,628,298 தொகையும் | தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் இழப்பீட்டு தொகையை செலுத்தாத சந்தர்ப்பத்தில் வழக்கு தொடரப்பட்டவரின் அசையும் ஆதனங்களை தடைக்குள்ளாக்கி அறவிடும் நடைமுறை குறித்த நீதவான நீதிமன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்காக இழப்பீட்டிற்கு உள்ளான தரப்பினர் முன்வர வேண்டியதுடன் அவர்கள் அதற்கான ஒத்துழைப்பினை வழங்காமையின் அடிப்படையில் இப்பணத்தை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.<br><br>இந்நிலைமையை தீர்ப்பதற்கு நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்திற்கு பதிவாளர் ஒருவரை நியமிப்பதற்கும் வழக்கு | இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்களுக்கு அமைய செயற்பட்டு உரிய நலனாளிகளுக்கு துரிதமாக பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| உள்ளடங்கியிருந்தது. இந்த விதத்தில் இழப்பீட்டு நீதிமன்றத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இழப்பீட்டு பெறுனருக்கு இத்தொகை கிடைக்காத காரணத்தினால் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. | தொடரப்பட்டவர்களுக்கு உரித்துடைய அசையாத சொத்துக்களை தடை செய்யக்கூடிய வகையில் அதிகாரச்சட்டத்திற்கு திருத்தங்களை உள்ளடக்கியுள்ளமையால் எதிர்காலத்தில் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு இயலுமாக இருக்கும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நீதிமன்ற உத்தியோகத்தர்களான தொழில் இழப்பீட்டு ஆணையாளர், மேலதிக தொழில் இழப்பீட்டு ஆணையாளர் மற்றும் பிரதி தொழில் இழப்பீட்டு ஆணையாளர் ஆகிய 3 பதவிகள் மற்றும் உதவி தொழில் ஆணையாளர் பதவி 1 உள்ளடங்கியுள்ளதுடன் நீண்டகாலமாக இவற்றுள் 3 பதவிகளும் வெற்றிடமாக நிலவியது. இழப்பீட்டு வழக்கொன்றினை நீதிமன்றத்தில் அழைப்பதற்கு நீண்டகாலம் எடுத்திருந்ததுடன் நாடு முழுவதும் அமைந்துள்ள 14 தொழில்நீதிமன்றங்களில் இழப்பீட்டு வழக்குகளை விசாரிப்பதற்காக ஒரு நீதிபதியே காணப்படுகின்றமை இதற்கு காரணமாக இருக்கக்கூடும். உதாரணமாக கொழும்பு வலயத்தினுள் மாத்திரம் அறிக்கையிடப்பட்டுள்ள உயிராபத்துமிக்க விபத்துக்களிடையே தீர்ப்பு வழங்கப்படாத இறுதியாக நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு 2 வருடங்கள் முதல் 7 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த கோவைகள் 26 அவதானிக்கப்பட்டன. | வெற்றிடமான பதவிகள் தொடர்பில் எம்மால் தொழில் அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றிற்கு காலாண்டு ரீதியாகவும் வருடாந்த அடிப்படையிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலதிக தொழில் இழப்பீட்டு ஆணையாளர் பதவியின் கடமைகள் மீண்டும் அறிவிக்கும் வரை தொழில் இழப்பீட்டு ஆணையாளர் மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமென நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தாங்கள் குறிப்பிட்டுள்ள வழக்கு கோவைகள் செயலிழந்துள்ள கோவைகள் அல்ல என்பதுடன் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கு கோவைகள் ஆகும். | இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத் தினை தாபித்த நோக்கத்தினை உச்ச அளவில் நிறைவேற்று வதற்கு உரிய மனித வளத்தினை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) 2021 ஆம் ஆண்டில் தொழில் அமைச்சின் ஆளணி வேதனத்திற்காக ரூபா 483,931,657 செலவிடப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் விபரம் பின்வருமாறு.

| **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **உண்மையான பதவியணி** | **வெற்றிட எண்ணிக்கை** |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 45 | 22 | 23 |
| மூன்றாம் நிலை | 10 | 06 | 04 |
| இரண்டாம் நிலை | 897 | 783 | 114 |
| முதன்மை நிலை | 57 | 32 | 25 |
| **மொத்தம்** | **1,009** | **843** | **166** |

சிரேஷ்ட மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைக்குரிய ஆட்சேர்ப்புக்கள் இவ்வமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படாததுடன் குறித்த நிறுவனங்களுக்கு வெற்றிடங்களை நிரப்புமாறு அறிவுறுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய பட்டதாரிகளை ஆட்சேர்க்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுனர்களின் போதியளவான எண்ணிக்கையானோர் இவ்வமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளமையால் இரண்டாம் நிலை மட்டத்திலான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

ஆட்சேர்ப்புக்கள் தொடர்பில் சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய வெற்றிடங்களை நிரப்புதல் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பல செயற்பாட்டு அபிவிருத்தி செயலணி மூலம் ஊழியர்களை வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் எதிர்பார்க்கப்பட்ட கடமைகளை மிகவும் வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மனித வளங்களை உகந்த முறையிலும் மற்றும் வினைத்திறனாகவும் பேணிச் செல்லுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.